இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

அரசிறை முகாமைத்துவக் குழு (RMC)

## பொது அறிவித்தல்

## வருமானத்தை மேம்படுத்தும் மூலோபாய முன்மொழிவுகளுக்கான அழைப்பு

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அரசிறை முகாமைத்துவக் குழு, (RMC) இலங்கையின் நடுத்தர மற்றும் நீண்ட கால வருமான மேம்பாட்டு மூலோபாயத்திற்கு பங்களிப்பு செய்வதற்காக **சிந்தனைக் குழுக்கள்** (think tanks)**, தொழில்சார் அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஆர்வமுடைய தனிநபர்களிடமிருந்து** முன்மொழிவுகள், கொள்கைப் பரிந்துரைகள் மற்றும் பகுப்பாய்வு சமர்ப்பிப்புகளை வரவேற்கின்றது.

**பின்னணி:** வருமான மூலோபாயங்களை உருவாக்குவதற்கும், வருமான முகவர் நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கும், வருமான மேம்பாடு குறித்த வழிகாட்டல்களை வழங்குவதற்கும் 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அரசிறை முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டுள்ளது. அரசிறை முகாமைத்துவக் குழு அதன் அதிகாரத்தின் ஒரு பகுதியாக, செயல்திறனை மேம்படுத்துதல், வரித் தளத்தை விரிவுபடுத்துதல் மற்றும் முறைசாரா பொருளாதாரத்தை முறைப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் அரசாங்கத்தின் வருமானத்தை **மொத்த உள்நாட்டு உற்பத்தியில்** (GDP) 20 **சதவீதமாக** உயர்த்தும் அரசாங்கத்தின் நடுத்தர மற்றும் நீண்ட கால நோக்கத்துடன் இணைந்த ஆதார அடிப்படையிலான முன்மொழிவுகளை எதிர்பார்க்கின்றது.

### முன்மொழிவுகளின் நோக்கெல்லை

முன்மொழிவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளை உள்ளடக்கலாம், ஆனால் இவை மட்டுமே எல்லைகள் அல்ல:

- அரசாங்க வருமானத்தை அதிகரிப்பதற்கான நடுத்தர மற்றும் நீண்ட கால மூலோபாயங்கள்;
- முறைசாரா பொருளாதாரத்தை முறைப்படுத்துதல் மற்றும் வரித் தளத்தை விரிவுபடுத்துதல்;
- செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த வருமான சேகரிப்பு முகவர் நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்குதல்;
- கொள்கை-சீரான வருமானம் திரட்டல் நடவடிக்கைகள்;
- தன்னார்வ வரி இணக்கம் மற்றும் வரி நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்;
- தரவு பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வருமான அமைப்புகளின் பயன்பாடு; மற்றும்
- வருமான நிர்வாகம் மற்றும் வரிக் கொள்கையில் சர்வதேச சிறந்த நடைமுறைகள்.

### தகைமை

அரசிறைக் கொள்கைத் துறையில் நிபுணத்துவம் பெற்றுள்ள பதிவு செய்யப்பட்ட சிந்தனைக் குழுக்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில்சார் சங்கங்கள், தனியார் துறை நிறுவனங்கள், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இலங்கைத் தனிநபர்கள் ஆகியோருக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## சமர்ப்பிப்பு தேவைப்பாடுகள்

முன்மொழிவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கி PDF வடிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

- முன்மொழியப்பட்ட வருமானம் மூலோபாயம், சீர்திருத்தம் அல்லது கொள்கை நடவடிக்கையின் சுருக்கம்;
- முன்மொழியப்பட்ட மூலோபாயத்தை செயல்படுத்துவதற்கான பொறிமுறை
- எதிர்பார்க்கப்படும் நிதி மற்றும் / அல்லது நிர்வாக தாக்கம்;
- முன்மொழியப்பட்ட வருமான மூலோபாயத்தை செயல்படுத்துவதுடன் தொடர்புடைய அபாயங்கள் ; மற்றும்
- நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட பெயர் மற்றும் பதிவு இலக்கமும், இம் முன்மொழிவு ஒரு இலங்கை பிரஜையினால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அவரது தேசிய அடையாள அட்டை இலக்கமும் தானாக முன்வந்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

📋 **சொல் வரம்பு:** முன்மொழிவுகள் பின்னிணைப்புகள் மற்றும் குறிப்புகள் நீங்கலாக 5,000 **சொற்களுக்கு** மிகையாகாமல் இருக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட சொல் வரம்பை மீறும் சமர்ப்பிப்புகளைப் பரிசீலிக்காமல் இருக்க அரசிறை முகாமைத்துவக் குழுவிற்கு உரிமை உண்டு.

**சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி**

**2026 யூன் 12**

## எப்படி சமர்ப்பிப்பது?

முன்மொழிவுகளை PDF வடிவத்தில் மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்:

அரசிறை முகாமைத்துவக் குழு
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
கொழும்பு 01.

**மின்னஞ்சல்:** dgfp@fpd.treasury.gov.lk
**தொலைபேசி இலக்கம்:** +94 112 484 648

*எந்தவொரு சமர்ப்பிப்பையும் ஏற்றுக்கொள்வதற்கும், நிராகரிப்பதற்கும் அல்லது மேலதிக விளக்கம் பெறுவதற்கும் அரசிறை முகாமைத்துவக் குழுவிற்கு உரிமை உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் அரசிறை முகாமைத்துவக் குழுவின் எதிர்காலக் கூட்டத்தில் தங்கள் முன்மொழிவுகளை முன்வைக்க அழைக்கப்படலாம்.*

அரசிறை முகாமைத்துவக் குழு
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
**திகதி:** 2026 மே 24